ஐந்தாம் வதிப்பு முதல்:—

தமிழ் ஆசிரிய பிரவேச பரீக்ஷைக்குரிய

# புதிய
# புத்திப் பயிற்சிமாலை.

நாவலர் அச்சுக்கூட வெளியீடு.

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

1948.

Rights Reserved.

001
புதிய
SL/PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

001
SL/PR.

W.H.T. Bartlett
22, Boswell Place
Wellawatta
23-8-50

## பரீக்ஷைக்குப் பிரவேசிக்கும் மாணவர் கவனிக்கவேண்டியவை:

---

1. நன்றாகத் தெரிந்த விடைகளை முதலாவதாக எழுதுக.
2. கடினமான விடைகளைக் கடைசியாக எழுதுக.
3. நம்பிக்கை இல்லாத விடைகளை ஒருபோதும் எழுதவேண்டாம்.
4. நேரத்துக்கு முன் விடைகள் எழுதி முடிந்தால் விடைப் பத்திரத்தைத் திருப்பிப் பார்க்க.
5. உமக்குக் கொடுக்கப்பட்ட நேரம் ஆராய்ந்து வேண்டுமென்றே கொடுக்கப்பட்டதாதலால், குறித்த நேரத்துக்கு முன்பு விடைப் பத்திரத்தைக் கொடுக்காதே.
6. விளக்கங்களிலே அதிக நேரத்தை வீணாக்காது, விளக்கத்தைச் சரியாக விளக்கி, விடைகளை விரைவாக எழுதுக.
7. எழுத்துத் தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்கவேண்டும்.

<u>முக்கிய கவனிப்பு</u>:—பயிற்சிகளில் ஏற்பட்டுள்ள பிழைகளை நூலின் முற்புறத்திலே பார்த்துத் திருத்திய பின்னரே பயிற்சிகளைச் செய்ய ஆரம்பிக்கவும்.

21639

O. S. M. ALI
BOOK SELLERS
66-3, AWWALZAVIA RD.,
GRANDPASS
COLOMBO - 01400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பயிற்சி | பக்கம் | வினா | இலக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | 7 | அந்தாதி | அகராதி |
| 1 | 5 | vii | வினா | அந்தவசனத்திலஇரண்டாஞ்சொல் வினைஎழுதிக்கீழேகீறிடுக. | அந்த வசனத்திலமுதலாம்இரண்டாஞ் சொற்களின மேல இலக்கம் இடுக. |
| 1 | 5 | vii | உ-ம் | சிவண ஒரு | 1 2 சிவன் ஒரு |
| 1 | 5 | vii | 5 | ஒருவண்கற்று | ஒருவணகற்ற |
| 2 | 8 | v | a | நிரைப்படுத்தி இடுக | நிரைப்படுத்தி எழுதுக |
| 2 | 9 | v | b | ,, ,, | ,, ,, |
| 2 | 10 | vii | உ-ம் | கட்டில், வாங்கு பெண்சில | கட்டில். வாங்கு (பெண்சில) |
| 2 | 10 | viii | 2 | 10,—.15,16,20,—, 21,—,—,30 | 10,11,15,16, 20,—,—, |
| 2 | 10 | viii | 3 | —,8,4,—,1,$\frac{1}{2}$,$\frac{1}{8}$ | —,8,4,—,1,$\frac{1}{2}$ |
| 2 | 10 | viii | 7 | $\frac{1}{8}$,$\frac{1}{4}$,—,1,$\frac{1}{2}$,—,—,$\frac{1}{8}$. | $\frac{1}{8}$,$\frac{1}{4}$,$\frac{1}{2}$,1,1,$\frac{1}{2}$,—,— |
| 2 | 10 | viii | 10 | 1,12,24,—,32,27,17 | 1,12,23,34,—,— |
| 2 | 11 | x |  | வினா | கீழேஉள்ளவற்றுள் முதலாவதுக்கு இரண்டாவது போல மூன்றாவதுக்குளது பொருந்தும் எனக் கீழ்க்கோடிடுக |
| 2 | 11 | x | உ-ம் | பூனை, எலி, ஆடு, குழை வைக்கோல் தவிடு | பூனை, எலி, ஆடு, குழைவைக்கோல தவிடு |
| 2 | 11 | x | 1 | 2, 5, 4, 8,9,10 | 2, 5, 4, 8, 7, 10 |
| 3 | 12 | 1 | உ-ம் | 8-ம் எழுத்தளது | 9-ம் எழுத்து எது |

| பயிற்சி | பக்கம் | வினா | இலக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 3 | 12 | ix | 5 | ஒருவியாழக்கிழமைகாலை7மணிக்கு | ஒருவியாழக்கிழமைகாலை யாழ்ப்பாணமிருந்து 7மணிக்கு |
| 3 | 13 |  | உ-ம் | பச்சைவெண்மை | பச்சைவெண்மை |
| 3 | 14 | i | உ-ம் | III | IIII |
| 3 | 14 | v | உ-ம் | எலும்புஉண்டு | எலுமபு உண்டு |
| 3 | 17 | ix | வினா | பின்வரும்பத்து | பின்வரும்முதற்பத்து |
| 3 | 18 | x | 1 | சிவசோதிக்கு( ) சிவக்கொழுந்துக்கு | சிவசோதி ( )சிவக் கொழுந்துக்கு |
| 4 | 19 | 1 | 4 | A இதில் | (a) இதில் |
| 4 | 19 | 1 | 4 | B Aயும் | (b) Aயும் |
| 4 | 23 | iv | 4 | (தலை, கை,கால். பிரதானம்) | (தலை, கை, கால்) பிரதானம் |
| 4 | 23 | ix | 5 | (வாய்பாடு எண்) கணக்கு | (வாய்பாடு எண் கணக்கு) |
| 5 | 28 | viii |  | அசனல் முள்ளொன்று கைத்தது | அதனல் முள்ளொன்று—தைத்தது |
| 6 | 30 | i | 2. | காவலன்கோ ( ) | காவலன் ( ) |
| 6 | 31 | iv | 5. | 1, 6, 11,—12— | 1,6,11,—21— |
| 6 | 31 | iv | 6. | 144,48 16,3,1,—,— | 144,48,16,—48,— |
| 6 | 31 | iv | 8. | 696,348,—87,29—. | —,696, 348,—87 |
| 6 | 32 | v | வினா | கதையில் உள்ள வெளிகளிலுள்ள | கதையில் உள்ள அடைப்பினுள்உள்ள |
| 6 | 32 | vi | 3 | [மத்தியஸ்தர்,பார்ப்போர்,போட்டியிடுவோர் இருப்பர்] | [மத்தியஸ்தர், பார்ப்போர்,போட்டியிடுவோர்] இருப்பர் |
| 6 | 32 | vi | 6 | தகப்பன்[அன்புள்ளவன் கிழவன் ஆண்பிள்ளை ஏழை] | தகப்பன் ஒரு அன்புள்ள [கிழவன் ஆண்பிள்ளை ஏழை] |
|  |  |  |  | 1562 | 1562 |
| 6 | 9 | x |  | 1642 | 1652 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி 1 நேரம்: 40 நிமிஷம்

I. பின்வரும் சொற்கூட்டங்களுள் ஒருதன்மையான மூன்றுசொற்களை அடைப்பினுட் சேர்.

உதாரணம்: (கருமை) (செம்மை) உண்மை (வெண்மை)

1 (தலை,) தொப்பி, (கால்,) (விரல்.)
2. (ஒன்று), (மூன்று), (ஒன்பது), ஐந்து.
3. (சட்டி,) (பானை), (அகப்பை), புத்தகம்.
4. (வெயில், (பனி), நீர், (மழை.)
5. (அரசன்), (மந்திரி), (காவலன்), புலவர்.
6. வானம், (வில்,) (அரைவட்டம்,) (வட்டம்.)
7. (எழுத்து, (சொல்,) (பொருள்), அந்தாதி. ? அந்தாதி
8. (சொண்டு, (சிறகு,) (பாதம், காக்கை.
9. கோழி, (ஆடும், (பாடும், (விளையாடும்.)
10. (பசி,) (தாகம், (உறைப்பு,) உணவு.

II. கீழே உள்ள வசனங்களில் பிழைகள் இருப்பின் அவற்றையும், விடைகளையும் வசன முடிபிலும் அதன் கீழும் எழுதுக.

1. நான் மகனுக்கு ஒரு கடிகாரம் வாங்கினேன்: அது நாளொன்றிற்கு இருமுறை சரியான நேரங் காட்டுகிறது. அது எப்படியான கடிகாரம்?

2. நான் மெலிந்துள்ளேன். நீயும் மெலிந்திருக்கிறாய். அவனோ எங்களிருவரையும் சேர்த்ததிலும் பார்க்கக் கூட மெலிந்திருக்கிறான். இந்த மூவருள்ளும் பருத்தவன் யார்?

3. மூன்றும் பிறைச்சந்திரனை மாதத்தில் எத்தனை முறை காணலாம்?

4. ஒரு வயோதிபர் தான் நந்தவனத்தை முன் சுற்றி வந்தது போல வர முடியாமையினால், அரைவாசித் தூரம் சென்று பின் திரும்பி வருவதாகக் கூறினார். இது நியாயந்தானா? ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. படையில் காலங்குறிக்கும் ஒரு போர் வீரன் என்னை விட மற்றைய யாவரும் பிழையாகக் காலங் குறிக்கின்றனர் என்றான். இது சரியா? பிழையா? சொல்ல முடியாதா?

III. பின்னுள்ள நியாயங்கள் உண்மையாயின் 'பொ' என்றும் பொய்யாயின் 'உ' என்றும் நியாயங்களின் இலக்கத்தோடு எழுதுக.

உதாரணம்:—

'உ' 1. விளக்கு எப்போதும் எரியும்.
'பொ' 2. கத்தியினால் எப்போதும் வெட்ட முடியும்.

1. ஐந்து சாட்சிகளும் ஆக்கிய சாட்சிகளே. அவர்கள் அங்கு நின்றிருந்தாலத்தானே சரியான சாட்சியம் கூற முடியும்.
2. "வெண்காயத்தை நான் விரும்பினால் நான் அதை வெறுக்கவேண்டும்" என்று ஒருவன் சொன்னான்.
3. முடிச்சுகள் உடமை நியாபகப்படுத்தச் செய்ய மாட்டா.
4. மலையின் உச்சியை எல்லாரும் பார்க்க முடியும்.
5. வாளும் ஈட்டியும் இரு கைகளிலும் வைத்துக் கொண்டு கடிதம் எழுத முடியாது.
6. பொருளாதாரச் சீர்திருத்தத்தின் பேரில் ஒவ்வொரு சோடி உடையினை ஒவ்வொருவரிடத்திலும் குறைத்து வந்தால் ஒரு சோடி உள்ளவன் ஒன்றும் இல்லாதிருக்கவேண்டும்.
7. செட்டைகள் சூரியனிலிருந்து வருவனவல்ல.
8. இரு மனிதரும் ஒரு பையனும் ஒரு மனிதனும் ஒரு பையனும் பார்ப்பதிலும் கூடிய தூரம் பார்க்க முடியும்.
9. அகராதியில் பொருள் தெரிந்த சொற்களைப் பார்க்க வேண்டியதில்லை.



10. நாங்கள் பூமியில் இருப்பது உண்டு களிப்பதற்காகவே.

IV. கீழே உள்ள கேள்விகளின்படி அவற்றின் வலது பாகத்திலே எழுதுக.

1. மெய்யெழுத்தின் முதல் எழுத்தை எழுது———
2. ஒரு தா அடையாளம் எழுதி அதைச்சுற்றி ஒரு வட்டம் கீறு.——
3. ஒரு சதுரங் கீறி அதனுள் 'ப' எழுதுக.———
4. வரிசையில் மூன்று 'சக' அடையாளங்கள் எழுதி முதலாவதையும் மூன்றாவதையும் மேற்புறமாக இணை.
5. ஒரு வட்டம் வரைந்து அதனுள் 'ல' எழுது. அதன் இடப்பாகத்தில் 'ச' எழுது. அதன் வலப்பாகத்தில் 'ம்' எழுதுக.
6. 'ெ, ே, ை' மூன்றையும் ஒரு வரிசையில் எழுது. ஐந்திலும் ஏழு குறையவானால் 'ெ' ஐ வெட்டிவிடு. இல்லாவிடில் 'ை' யின் கீழ் கீறிடுக.
7. ஒரு சதுரம் ஒரு முக்கோணத்திலும் கூடிய புயங்களையுடையதானால் முக்கோணத்துள் சதுரம் வரை. இல்லாவிடில் சதுரத்துள் முக்கோணம் வரை.
8. ஒன்பது எழுத்தாலான சொல்லொன்று சிந்தித்து அதன் நடு எழுத்தையும் முதல், கடை எழுத்துக்களையும் எழுது.
9. வரிசையில் ஒழுங்காக ஒரு முக்கோணம், ஒரு சதுரம், ஒரு வட்டம் வரைக. முக்கோணத்துள் 'இ' எழுது. வட்டத்துள் ஒன்றும் எழுதாதே. சதுரத்துள் இரண்டிற்கு அடுத்த ஒற்றை எண்ணல்லாத ஒரு எண் எழுது.
10. இந்த வசனத்திலுள்ள இரண்டாம் சொல்லின் எழுத்துக்கள் எத்தனை என எழுதிப் பக்கத்தில் 'பசு' நாயில் சிறியதானால் 'பூனை' என்றும் பெரியதானால் 'நாய்' என்றும் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V கீழ்வரும் எண் வரிசைகளிலுள்ள அடுத்த இரு எண்கள் தருக.

(1) 12 11 10 9 8 (2) 1 3 5 7 9.
(3) 9 9 8 8 7 (4) 1 5 2 5 3.
(5) 1 2 4 7 11 (6) 1 4 9 16 25.
(7) 2 4 5 10 11 (8) 10 7 9 6 8.

VI (a) பொன்னையாவுக்குப் பொன்னம்மா என்ற சகோதரியும் பொன்னம்பலம் என்ற சகோதரனும் பொன்னுத்துரை என்ற மைத்துனனும் உளர்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) பொன்னம்பலத்தின் சகோதரி யார்?
(2) பொன்னம்மாவின் மைத்துனன் யார்?
(3) பொன்னுத்துரையின் மைச்சான் யார்?
(4) பொன்னம்பலத்தின் சகோதரன் யார்?
(5) பொன்ளம்மாவுக்கு எத்தனை சகோதரர் உண்டு?
(6) பொன்னுத்துரைக்கு மைத்துனர் எத்தனை பேர்?

(b) ஐந்து ஆண் பிள்ளைகள் பொன்னுத்துரை, பொன்னம்பலம், சின்னத்துரை, சின்னத்தம்பி, சபாபதி ஒரு வரிசையில் இருந்தனர். பொன்னம்பலம் வரிசையின் ஒரு அந்தத்திலும் சின்னத்துரை வரிசையின் மறு அந்தத்திலும் இருந்தனர். பொன்னம்பலத்தின் பக்கத்தே சின்னத்தம்பியும் சின்னத்துரையின் பக்கத்தில் பொன்னுத்துரையும் இருந்தனர்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(7) பொன்னம்பலத்திற்கும் சின்னத்துரைக்கும் இடையே எத்தனை பேர் இருந்தனர்?
(8) மத்தியில் இருந்தவன் யார்?
(9) சின்னத்தம்பிக்கும் பொன்னுத்துரைக்கும் இடையில் இருந்தவன் யார்?
(10) சபாபதிக்கும் பொன்னம்பலத்துக்கும் இடையில் இருந்தவன் யார்?



(11) சின்னத்தம்பிக்கும் சின்னத்துரைக்கும் இடையில் இருந்தவர் எத்தனை பேர்?

VII. கீழுள்ள சொற்கூட்டங்களை ஒழுங்குபடுத்தின் நல்ல வசனமாகும். அந்த வசனத்தின் இரண்டாஞ் சொல்லினை எழுதிக் கீழே கீறிடுக.

உதாரணம்:—

சிவன் பெரிய கெட்ட ஒரு பையன்.

1. உதவும் ஊற்றுப்பேனா எழுத நன்றாக
2. கூருடையது அதிக வாள் உருக்கு.
3. பிள்ளை அழுதாலும் பெறவேண்டும் அவளே.
4. பாதி குல பாதி கற்று கல்லாது வித்தை.
5. ஒருவன் கற்று ஒரு முறை எழு முறையும் தொடரும் கல்வி.
6. தெரியும் வடிவு முகத்தில் உள்ளத்தின்.
7. தமிழ் யாமறிந்த மொழிபோல் மொழிகளிலே காணோம் எங்கும்.
8. தக கசடறக் கற்க கற்றபின் கற்பவை அதற்கு நிற்க.
9. தாலாட்டினாள் ஆராரோ ஆரிவரோ தாய் என்று.
10. கூட பாப வருவது கூற்றுவன் புண்ணியம் உயிர் கொண்டு பொழுதுபோகும்.

VIII. குறைந்து போகும் ஒழுங்குப்படி இலக்கம் இடுக.

1. 2 5 17 10 26.
2. 99 91 19 16 61.
3. அறுகோணம், முக்கோணம், சதுரம், ரேகை, கோணம்.
4. பலாக்காய், பனங்காய், மாங்காய், தேங்காய், எலுமிச்சங்காய்.
5. பூவரசம் இலை கிழுவம் இலை, வாழை இலை, விளாத்தி இலை, புல்லாந்தி இலை.
6. அத்தியாயம், புத்தகம், பந்தி, சொல், பாடம்.
7. பிள்ளை, மனிதன், குழந்தை, காளை, கிழவன்.
8. 60, 10, 22, 05, 75.
9. $\frac{3}{4}$, $\frac{5}{16}$, $\frac{1}{4}$, $\frac{3}{8}$, $\frac{1}{2}$.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. விறகு, மரம், சாம்பர், குற்றி, கரி.

IX. கீழ் வரும் பத்து வாக்கியங்களின் தொடர்பு அவற்றின் கீழுள்ள பத்து (11—20) வாக்கியங்களில் உண்டு. முதற் பத்து வாக்கியங்களின் வலப்பாகத்தில் மற்றைய பகுதியின் இலக்கத்தை எழுது.

1. வாழும் பிள்ளையை — — —
2. விளையும் பயிரை — — —
3. தொட்டிலில் பழக்கம் — — —
4. இரக்கப் போயினும் — — —
5. நிழலின் அருமை — — —
6. நித்தம் போக — — —
7. தவிடு தின்னி — — —
8. திரைகடல் ஓடியும் — — —
9. யானை வருமுன்னே — — —
10. பலமுறை யோசித்து — — —
11. கோழி வளர்வாள்
12. வெய்யிலிற் சென்றாற் றெரியும்.
13. பணத்தைத் தேடு.
14. ஏற்பவர் இல்லாது போகும்.
15. இரைச்சல் வரும்.
16. இறக்கும் வரைக்கும் உண்டு.
17. முளையிலே தெரியும்.
18. எதனையுஞ் செய்.
19. குழந்தையிலேயே அறியலாம்.
20. இழக்கப் போகாதே.

**பயிற்சி 2.** **நேரம் 40 நிமிஷம்**

I. பின்வரும் வாக்கியங்களுள் பொருந்தாத வாக்கியத்திற்கு நேரே இடது புறத்திலே '+' அடையாளம் இடுக.

உ+ம்.

1. ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் இரண்டு.
2. ஒருமையுடன் இருமை சேர்ந்தால் ஒருமை.

\+ 3. கத்தரியுடன் வாழை சேர்ந்தால் ஒன்றுமில்லை.



a. 1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
2. ஒற்றுமை நிலையங்களிற் பலங்கூடியவர்கள் உண்டு.
3. பிறருடன் சேர்ந்தால் நீ பலமுடன் வாழ்வாய்.

b. 1. மழை எப்போதும் பெய்வதேயன்றி ஊற்றுவதில்லை.
2. ஒவ்வொரு தீமையுந் தன்னுடன் ஒவ்வொரு நன்மையைக் கொண்டு வரும்.
3. கெடுதிகள் எவையுந் தனித்து வருவனவல்ல.

c. 1. ஒருவனே முதலாளியாக இருக்க முடியும்.
2. முதலாளி இல்லாவிடிற் றொழிலாளி விளையாடுவான்.
3. பாடசாலையில தலைமையாசிரியர் சொற்படி நடக்க வேண்டும்.

d. 1. கோடை காலத்தில் வாழ்வு கடினமானது.
2. மாரி காலத்திற்கென தினமுஞ் சிறிது சேமித்துவை.
3. உழைப்பு உள்ளபோது கவனமாகவிருந்தால் உழைப்பில்லாவிடினும் வாழலாம்.

e. 1. முளையிலே கிள்ளிவிட்டால் முள்ளாக மாறாது.
2. முதலில் ஒரு தையல் முடிபில் பல தையல்களைத் தடுக்கும்.
3. விளையும் பயிரை முளையிலே தெரியும்.

II. கீழ் உள்ள சொற் கூட்டங்களைப் பிறிதான பொருள் படப் பிரித்து எழுதுக.

உ+ம்: வாரும் இரும்படியும் = வாரும் இரும்பு அடியும்

1. தலைவிதி வசம் =
2. எழுவாய் பயனிலை =
3. சந்தனஞ் சும்மா வரிற் பூசலாம் =
4. போனதுமிருந்ததும்படி தந்தான் =
5. கண்டேனல்லேன் =
6. புணியாரந்தோசை வருமென்றிருப்பர் =
7. இருபத்தொன்பது =
8. எண்ணெய் தேய்க்கப் பலகை வேண்டும் =

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. கீழ் உள்ள சோட்டுச் சொற்கள் ஒரு தன்மையினவாயின் 'வேறு' என்றும், வேறுபட்டவையாயின் 'ஒன்று' என்றும் கீறிட்ட இடங்களில் எழுது.

1. உஷ்ணம் , வெப்பம் —— 7. தட்டுப்படும் , சந்திக்கும் ——
2. உபகாரம் , அபகாரம் —— 8. ஒன்றுபடுதல், பலதுடைய்தல் ——
3. நேர்மை , ஒழுங்கு —— 9. நியாயம் , நேர்மை ——
4. சுத்தம் , அசுத்தம் —— 10. பந்து , மித்திரர் ——
5. புள்ளிகள், சேனை ——
6. கனகன் , பொன்னன் ——

iv. கீழே உள்ள முதற் பத்துப் பெயர்களின் ஒலிகளையும் இரண்டாம் பத்துச் சொற்களும் விபரிக்கின்றன. முதற் பத்துப் பெயர்களுக்கும் பொருத்தமான சொற்களைத் தெரிந்து எடுத்துச் சொற்களின் இலக்கத்தைப் பெயர்களின் நேரே உள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. நாய் | ( ) | 11. ஊளையிடும் |
| 2. பசு | ( ) | 12. உறுமும் |
| 3. நரி | ( ) | 13. கதறும் |
| 4. பன்றி | ( ) | 14. கனைக்கும் |
| 5. குதிரை | ( ) | 15. சீறும் |
| 6. பாம்பு | ( ) | 16. குரைக்கும் |
| 7. சேவல் | ( ) | 17. கரையும் |
| 8. சிங்கம் | ( ) | 18. கொக்கரிக்கும் |
| 9. காகம் | ( ) | 19. கர்ச்சிக்கும் |
| 10. கோழி | ( ) | 20. கூவும் |

v a. பின்வருவனவற்றை "ஆரோகண" முறையாக நிரைப்படுத்தி இடுக.

1. $\frac{7}{8}, \frac{1}{2}, \frac{3}{4}, \frac{5}{8}, \frac{11}{16}$.
2. $\frac{1}{4}, \frac{1}{16}, \frac{1}{8}, \frac{1}{32}, \frac{1}{2}$.
3. பந்து, உருளை, அண்டம், பூமி, வண்டிச் சில்லு.
4. அவுன்ஸ், அக்தர், தொன், றாத்தல், குவாட்டர்.
5. பவுண், வெள்ளி, ஈயம், மரம், செம்பு.



b. பின் வருவனவற்றை 'அபரோகண' முறையாக நிரைப்படுத்தி இடுக.

1. 1000, 600, 850, 50, 950
2. மூடை, படி, பறை, நெல், அரிசி
3. குரங்கு, யானை, மான், அணில், ஆடு
4. தென்னை, கமுகு, புளி, புல், வாழை
5. $\frac{15}{16}, \frac{17}{16}, \frac{17}{20}, \frac{17}{25}, \frac{19}{30}$

vi. சரியான விடைகளை வினாக்களின் முடிபுகளிலுள்ள கீறிட்ட இடங்களில் எழுது.

1. ஒரே நிறையான இரண்டு மரக் கனக்குற்றிகள் ஒன்றிலும் மற்றையது சிறிதளவு பெரியதாக உண்டு. இவற்றில் ஒரு குற்றியினுள் மற்றையது போகக் கூடியதாக ஒரு துளை செய்யப்பட்டது. அதன் பின்பும் பெரிய குற்றியே பாரங்கூடியதாக இருந்தது? இது முடியுமா? எப்படி?

2. பூதனின் தற்போதைய வயது 7; அவனுடைய தங்கையின் தற்போதைய வயது 5. தங்கையின் வயதிலும் இருமடங்கு வயதாகப் பூதன் எத்தனை வருடங்களுக்கு முன் இருந்தான்?

3. இரண்டு பல்லில்லாத ஏழு வயதுப்பையனின் பல்லுக்கும் இரண்டு பல்லில்லாத 32 வயதுத் தகப்பனிற்குள்ள பல்லுக்கும் உள்ள வித்தியாசம் எத்தனை?

4. நாளொன்றிற்கு ரூபா 5 மிச்சமாக உழைக்கக் கூடிய ஒருவனுக்கு ரூபா 300 குற்றம் அல்லது 50 நாள் மறியல் தீர்த்தது. இவன் மறியல் செல்ல வேண்டிய தினத்திலிருந்து 7-ம் நாள் சுதந்திர நாளானால், இவன் குற்றம் கொடுப்பதோ மறியல செல்வதோ இவனுக்கு லாபமாகும்? எவ்வளவால் லாபம்?

5. இலங்கையில் வெளிவரும் காலை, மாலை, வாரமொருமுறை வாரம் இருமுறை, மாசம் ஒருமுறை வெளிவரும் புதினத்தாள்கள் ஒவ்வொன்று எழுது.

6. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் இலங்கை பெற்ற இரு பெரும் நன்மைகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கணபதியின் ரூபா 100 பெறுமதியான ஒரு சைக்கிளை நடராசா களவாண்டுகுமாரவேலுவுக்கு ரூபா60-க்கு விற்கின்றான் இதிலே நட்டம் அடைபவன் யார்? —— 2.எவ்வளவுநட்டம்? —— 3. இதிலே லாபம் அடைபவர் யார்?———— 4. எவ்வளவு லாபம்? ———

VII. கீழ் உள்ள முதல் மூன்று சொற்களுக்கும் பொருத்தமான ஒரு சொல்லினை அடுத்த கூட்டத்தில் அடைப்புக்குறியுள் இடுக.

உ—ம்: மேசை, கதிரை, புத்தகம்—கட்டில், வாங்கு, பென்சில், படுக்கை.

1. தளபதி, தலைவன், சேனபதி—கப்பல், சேனை, ஆசிரியர், யுத்தம்.
2. பாடசாலை, வகுப்பு, பிள்ளைகள்—அறை, தூண், யன்னல், கதவு, ஆசனம்.
3. நேர்மை, தாட்சண்யம், அன்பு — பலம், சுயநலம், வடிவு, ஒற்றுமை.
4. சிங்கம், புலி, கரடி—குதிரை, ஆடு, மாடு, ஓநாய்,
5. குதிரை, யானை, கழுதை—ஒட்டகம், புலி, எருமை, கரடி.
6. ஆல், அரசு, வேம்பு—பூவரசு, இலுவை, முருங்கு, மா.
7. பனை, தென்னை, கமுகு—தாழை, பேரிந்து, முதுரை, கருங்காலி.
8. கோழி, வௌவால், ஆடு—காகம், புறா, கிளி, ஆந்தை.
9. வேலன், முருகன், கறுப்பன்—பொன்னி, பொன்னு, சின்னான், சின்னி.
10. தொப்பி, செருப்பு, சட்டை—கை, பிரம்பு, சப்பாத்து, வேட்டி.

VIII. இல்லாத இலக்கங்களை நிரப்புக.

1. 12, 11, 10,—,—,7,—5.
2. 10,—, 15, 16, 20—21,—,—,30.
3. —, 8, 4,—,1, $\frac{1}{2}$, $\frac{1}{8}$.
4. —,—,4, 8,—,32,—128.
5. 90, 85, 70, 65,—,—, 30.
6. 100, 105, 101, 97,—,87, 85,—,—.
7. $\frac{1}{8}$, $\frac{1}{4}$,—, 1, $\frac{1}{2}$,—,—,—$\frac{1}{8}$.
8. 1000, 800,—, 500, —300, 100.
9. 99, 77,—,55,—, 33.
10. 1, 12, 24,—,—32, 27,—,17.

IX. கீழே உள்ள கதையை வாசித்த பின் அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.



நடேசனின் 45 ஆம் ஆண்டிலே அவன் மனைவி கமலம் தனது 20 ஆண்டு இல்லற ஜீவியத்தின் பின் தனது 18 வயது ஆண்பிள்ளையையும், 15 வயதுப் பெண்பிள்ளையையும் விட்டு இறந்தாள். நடேசன் தனது ஐம்பதாம் வயதிலே சீர்மை சென்று மூன்று வருடங்களின் பின் இலங்கை திரும்பும்போது 21 வயதான மேறியை விவாகஞ் செய்து மீண்டார். மேறியின் தாயார் 'மாகிறெற்' இளமைத் தோற்றம் உடையவள். யுத்த காலத்தில் இலங்கை வந்து பின் திரும்ப முடியாமையினாலே, நடேசனின் மகன் இளையதம்பியை மணந்து கொண்டாள்.

1. இளையதம்பி விவாகஞ் செய்யும்போது வயது என்ன?
2. மேறிக்கு மாகிறற் என்ன முறை?
3. இளையதம்பியின் சகோதரிக்குச் சிறிய தாயாகிய மேறியின் தாயார் என்ன முறை?
4. இளையதம்பிக்குத் தந்தையின் விவாகத்தால் மாகிறெற் என்ன முறை?
5. இளையதம்பியின் சகோதரிக்கு அவன் மனைவி என்ன முறை?
6. இளையதம்பியின் சகோதரி தனது சகோதரனின் மனைவி (மைத்துனி) யின் மகள் மேறியை என்னென்று அழைக்க வேண்டும்?
7. இளையதம்பியின் மனைவி அதே நேரத்திலே அவனுக்கு என்ன முறையாக இருக்கின்றாள்?
8. நடேசனுக்கு மாமியாராகவும் மருமகளாகவும் இருப்பவர் யார்?
9. ஒருவனுக்கு மனைவியாகவும் அதே நேரத்திற் பேத்தியாகவும் இருப்பவள் யார்?
10. நடேசனின் மாமியாரின் மகன் இளையதம்பிக்கு என்ன முறையாக இருப்பான்?

X. கீழே உள்ள மூன்று பெயர்களோ, இலக்கங்களோ உள்ள இடங்களில் பொருத்தமான ஒன்றன் கீழ் கீறிடுக.

உ—ம்: பூனை, எலி, ஆடு, குழை, வைக்கோல், தவிடு.

1. அரசன், அரசி, புருஷன், பிள்ளை, மகள், மனைவி.
2. 2, 5, 4, 8, 9, 16.
3. 3, 6, 9, 18, 24, 15.
4. கணபதி, வேலன், கோபாலன், கோவிந்தன், கண்மணி, பெரியவன்.
5. அவள், இவள், அது, உது, எது, இது.
6. ஒற்றுமை, வேற்றுமை, சமாதானம், யுத்தம், அடிபிடி, கோபம்.
7. பென்சில், மரம், மேசை, லாச்சு, பூட்டு, மாம்.
8. நாய், வீடு, நரி, காடு, நாடு, நகரம்.
9. பவுண், மோதிரம், செருப்பு, தோல், றப்பர், மரம்.
10. எருது, உழவு, புகைவண்டி, கரி, எண்ணெய், நீர்.

21639

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயிற்சி: 3** **நேரம்: 40 நிமிஷம்**

1 கீழே உள்ள வினுக்களுக்குச் சரியான விடையை ஒவ்வொரு வினுவின் முடிவிலும எழுதி அவற்றிற்கு அடைப்புக்குறிகள் இடுக.

உதாரணம்:—

உயிர் எழுத்துக்களின் 12-ம் எழுத்திலிருந்து பிற்புறமாக உள்ள 8-ம் எழுத்து எது? (ஈ)

1. வல்லின மெய்யெழுத்துக்களின் கடை எழுத்து நீக்கி மறு எழுத்துக்களின் நடு எழுத்திலிருந்து 4-ம் எழுத்து எழுது.
2. மெய்யெழுத்தின் ஆருவது எழுத்தும் மெல்லின மெய்யில் உண்டு. அது எது?
3. முதலில் இருந்து அடுத்துவரும் இரு எண்களால் ஆக்கப் பட்ட ஒரு எண்ணுக்கும் அந்த எண்களை இடம் மாறி வைப்பதினுல்உண்டாகும்எண்ணுக்கும் உள்ள வித்தியாசம் 9: கூட்டுத்தொகை 33, எண்களென்ன?
4. ஒரு பெட்டியினுள் முதனுள் போட்ட தொகையின் இரு மடங்கு அரிசி இரண்டாம்நாள் போடுவதுவழக்கம் அந்தப் பெட்டியின் அரைப்பாகம் நிரம்பியபின் எத்தனையாவது நாளில் முழுப்பெட்டியும் நிரம்பும்?

ஒரு வியாழக்கிழமை காலை 7மணிக்கு விமானமார்க்கமாகச் சென்று கொழும்பிற்றங்கி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குச் சிங்கப்பூர் புறப்படும் விமானத்தை 'A' என்ற ஒருவர் எடுக்கின்றூர். சிங்கப்பூர் செல்லும் 'B' என்னும் வேருெருவர் வியாழக்கிழமை மாலை புகைவண்டியில் கொழும்பு சென்று அதே விமானத்தில் சிங்கப்பூர் செல்கிறூர். இவர்களில் பிரயாணத்திற்குக் கூடியநேரம் செலவு செய்பவர் யார்?



II நீக்காணும் பல சொற்களில் ஏற்ற சொல்லின் கீழ் கீறிடுக.

உதாரணம்:—

காகம் : கருமை : : அன்னம் : சிவப்பு. பச்சை வெண்மை

1. ஆடும்: மயில்:: பாடும், கூவும், பறக்கும்: குயில்.
2. கமுகு: பாக்கு. தேங்காய், ஓலை:: வாழை: இலை.
3. இருக்க. படுக்க. நிற்க, கட்டில்:: படிக்க: மேசை.
4. மீசை: விருப்பு:: சோறு, பிட்டு, கூழ்: வெறுப்பு.
5. வெண்மை: கருமை:: மணி, பகல், வாரம்: இரவு.
6. மேலே: சிறிய, உயர, கீழே:: கிழக்கு: மேற்கு.
7. மீன்: நீந்தும்:: மனிதன், மிருகம், பறவை: நடக்கும்.
8. வெப்பம்: சூடு, உஷ்ணம், தீ--குளிர்ச்சி: நீர்.
9. சிறிய- அதேபோல, பெரிய குறுகிய-- உயர்ந்த வளர்ந்த
10. மனிதன்- சமையலறை-- மரம்- வேர், தரை, இலை.

III. கீழே உள்ள எண் வரிசையில் இல்லாத இரு எண்களை நிரப்புக. நிரப்பிய எண்களின் கீழ் கீறிடுக.

உதாரணம்- 1. 9. 10. 19. <u>20</u> 29. <u>30.</u> 39

1. 2, 5., 9, ——, 20, 27——
2. —, 4, 3, 9, 4, 16, 5——
3. 1, 11, 31, 61, ——151, ——
4. 9, 7, 11, 8, 13——, 15, 10——
5. 2, 4, 7, 11, 4, 8, 14, ——, 6
6. 200, 100. 50 —— ——
7. 2. 6. 18 —. —. 486
8. 200, 50, 100. 25, 96, — 80, 20, — 15
9. 9, 4, 18, 13, 27. — 36, 31 — 40
10. —, $\frac{7}{8}$, $\frac{3}{4}$, $\frac{5}{8}$, —, $\frac{3}{8}$, $\frac{1}{4}$

IV. கீழ்க்காணும் வினுக்களுக்குள்ள மூன்று விடைகளுள் பொருத்தமானது என நீர் எண்ணும் விடையின் இலக்கத்திற்கு வட்டம் இடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்: -

நீ அறியாத ஒருவரைப்பற்றி உன்னிடம் வினவினல் என்ன சொல்லுவாய்?

i அவர் சுகமாக இருக்கின்றார் என்பேன்
ii அவருடன் அறிமுகஞ் செய்வேன்
iii எனக்கு அவரைத் தெரியாது என்பேன்

1. நாங்கள் ஏன் கற்கின்றோம்?
   i உத்தியோகம் பார்ப்பதற்கு
   ii அறிவை வளர்ப்பதற்கு
   iii மற்றவர்கள் கற்கின்றபடியால்

2. பணம் ஏன் வேண்டும?
   i பணக்காரன் என்ற பெயர் பெறுவதற்கு
   ii பிறருக்கு வட்டிக்குக் கொடுப்பதற்கு
   iii தரும வழியில் செலவு செய்வதற்கு

3. நாம் ஏன் நித்திரை செய்ய வேண்டும்?
   i இரவு நேரத்தைக் கழிப்பதற்கு
   ii தேகத்திற்கு ஓய்வு கொடுப்பதற்கு
   iii விழிப்பு இருக்க முடியாமையால்

4. பெண்கள் ஆபரணம் அணிவது ஏன்?
   i பிறரை ஏமாற்றுவதற்கு
   ii தம்மை அலங்கரிப்பதற்கு
   iii எல்லாப் பெண்களும் அணிவதினல்

5. நாங்கள் விவாகஞ் செய்வதேன்?
   i இல்லற தருமத்தைச் சரிவர நடத்துவதற்கு
   ii புதல்வர்களைப் பெறுவதற்கு
   iii காதலைப் பூர்த்தி செய்வதற்கு

v வெற்றிடத்தில் ஏற்ற சொல்லைத் தெரிந்து வைத்து நிரப்புக.

உதாரணம்: —

ஒரு பறவைக்கு எப்போதும் எலும்பு உண்டு.

குஞ்சு எலும்பு கூண்டு பாட்டு



1. செருப்புக்கு எப்போதும்——உண்டு (சாம்பர், அபாயம், சுவாலை, உஷ்ணம்)
2. கடதாசிக்கு எப்போதும்——உண்டு (கன்னங்கள் மேற் கோடு நீர் அடையாளம்)
3. ஒன்றுபடுத்த எப்போதும்——வேண்டும் (சரிப்படுத்தல் சிநேகம் பொருத்தம் திருப்தி)
4. போசனத்துக்கு எப்போதும் —— வேண்டும் (ஆசனம் சமாதானம் வெளிச்சம் உணவு)
5. பத்திரிகைவாசிப்பதற்கு எப்போதும்—— வேண்டும் (அறிவு கண் கை மேசை)
6. அகிம்சைக்கு எப்போதம்—— வேண்டும். (சமாதானம் ஜீவ காருண்யம் மாமிசவிருப்பு)
7. வீட்டுக்குஎப்போதும்——வேண்டும். (மேசை கட்டில் சாப்பாட்டறை, சமையலறை)
8. மாணவனுக்கு எப்போதும்——வேண்டும். (புத்தகம் கீழ்ப்படிவு எதிர்ப்பு)
9. கோவிலுக்கு எப்போதும்—வேண்டும்(ஐயர் மணி, கோபுரம் உருவம்)
10. அறைக்கு எப்போதும்—வேண்டும். (லாம்பு, யன்னல், கட்டில், மேசை)

vi. பின்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களை கீழுள்ள சொற்கூட்டத்தில தெரிந்தெடுத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. அரசன் | 2. வண்ணாத்தி | 3. இராசாத்தி |
| 4. சேவல் | 5. களிறு | 6. நாகு |
| 7. மணமகன் | 8. அப்பா | 9. சீமான் |
| 10. ஸ்ரீமான். | | |

(செல்வன், செல்வி, மணமகன், இராசாத்தி, வண்ணான், இராசா, அரசி, பேடு, ஸ்ரீமதி, சீமாட்டி, நாம்பன், மணமகள், எருது, மணப்பெண், பிடி, பணக்காரி, யானை, அம்மா, பாட்டி, பெத்தாச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. பின்வரும் வினுக்களின் சரியான விடைகளை வினுவின் முடிவில் உள்ள இடத்தில் எழுதி அடைப்புக்குறி இடுக.

1. கணிதத்தில் கனசத்திற்கு தங்கத்திலும் இருமடங்கு பிழைகளும் முத்துவுக்குத் தங்கத்திலும் இருமடங்கு பிழைகளும் உண்டாயின் கனகத்திற்த முத்துவிலும் பார்க்கப் பிழை கூடவா? குறையவா? சரிதொகையா? சொல்ல முடியாதா?

2. ஒரு பட்டினத்தின் சனத்தொகையின் 45% ஆண்கள் இருமடங்கு சனத்தொகையுள்ள மறுபட்டினத்திலும் 60% ஆண்கள் இருப்பின் இரு பட்டினங்களினுமுள்ள ஆண்களின் வீதம என்ன?

3. காலை 6 மணி 35 நிமிஷத்திற்கும் சாயந்தரம் 6 மணி 35 நிமிஷத்திற்கும் இடையேயுள்ள நடு நேரம் என்ன?

4, 'A' ஒரு மனிதன் அவனுக்கு தலையில் மயிர் உண்டு. ஆதலால் எல்லா மனிதருக்கும் தலையில் மயிர் உண்டு. இம்முடிவு சரியா? பிழையா? சொல்ல முடியாதா?

5. 1அடி நீளம் 1அடி அகலம் 1அடி உயரமான 10 குற்றிகள் கொடுக்க வேண்டிய ஒருவன் ஒரே குற்றியாகக் கொடுப்பதற்காக 10 அடிநீளம் 10 அடி அகலம் 10 அடி உயரமான ஒரு துண்டினை வெட்டிக் கொடுத்தான். இதனுல் அவனுக்கு லாபமா? நட்டமா?

viii பின் வரும் வசனத்தின் வெளிகளில் உள்ள மூன்று சொற்களில் பொருத்தமற்ற இரு சொற்களின்மேல் × இடுக.

உதாரணம்—

கணபதிப்பிள்ளை நல்ல × ( × ஆண், ) பிள்ளை

1. காட்டிலே வாழும் மிருகங்களுக்கு அரசன் (புலி, சிங்கம், யானை)

2. சமாசத்தின் அடிப்படை (கலப்புமணம், தீண்டாமை நீக்கம், பேதங்காட்டாமை)

3. பாட்டிற் சிறந்த பட்சி (மைனு, கிளி, குயில்)



4. நான் பந்து கொண்டு (ஓடும்பொழுது, விளையாடும்போது, அடிக்கும்போது) கண்டன் கோபாலன் (பின்னுல் முன்னுல், பக்கத்தால்) வந்து தடுத்து பந்துடன் எனது (கீழ்க்காலிற்கு, குதிக்கு, மொழிக்கு) அடித்ததினுல் நான் முகங்கீழ் நோக்கிய வண்ணம் விழுந்தேன்.

5. முயற்சியுடையவராளுலும்(எப்போதும், சிலசமயம், ஒருபோதும்) வறுமை யடைந்து (தன்னை, கடவுளை, பிறரை, நொந்து சிறப்படையாது (பூமியில், மறு உலகில் வாழ் நாளில்) துன்பப்படுவதைக் காண்கின்றோம்.

IX பின் வரும் பத்து பழமொழிகளுக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கீழே காணலாம். அந்தப் பொருத்தமான பழமொழியின் இலக்கத்தை மேலுள்ள பழமொழிகளின் ஈற்றில

1. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும் [எழுதுக.
2. குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி
3. நித்தம்போக முத்தம் சலிக்கும்
4. குலவித்தை கற்றுப்பாதி கல்லாமல் பாதி
5. பூனைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குச் சீவன்போகிறது
6. அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்
7. பொன்னின் கத்தியென்று வயிற்றிலே குத்தலாமா?
8. வேலிக்கு ஓணுன் சாட்சி
9. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
10. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
11. செய்ய முடியாததிற்குச் சிலர் விரும்புவர்
12. ஒருவருடைய துன்பத்தைப் பிறர் அனுபவிக்க முடியாது
13. பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம
14. கள்வனைப் பிடிப்பவன் கள்வனே
15. எந்தப் பொருளையும் தகுந்தபடி உபயோகிக்கவேண்டும்
16. கிடைத்த தருணத்தை நழுவ விடப்படாது
17. குலத்தொழிலைப் பிள்ளைகள் தாமாகவே சிறிதளவு
18. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு [செய்வர்
19. பழகப்பழகப் பாலும் புளிக்கும்
20. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

பின்வரும் விஷயத்தை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக:

"கணபதியும் மனைவியும் சிவவாசம் (மூத்தபிள்ளை) சிவக்கொழுந்து, சிவநேசம் (இளையபிள்ளை) என்று மூன்று பிள்ளைகளைப் பெற்றனர். சிவவாசம் செல்வன் சிவகுமாரரை மணந்து பெற்ற மகன் சிவசோதி. சிவநேசம் செல்வி சிவபாக்கியத்தை மணந்து பெற்ற பிள்ளைகள் சிவயோகம் சிவபாலன்.

வினா—

1. சிவசோதிக்கு (ஓர் ஆண்பிள்ளை) சிவக்கொழுந்து என்ன [முறை?
2. சிவயோகத்தின் அத்தைகள் எத்தனை பேர்?
3. சிவசோதியின் முழுப்பெயர் என்ன?
4. கணபதியின் பேரப்பிள்ளைகள் எத்தனை?
5. சிவபாக்கியத்திற்கு சிவவாசம் என்ன முறை?

### பயிற்சி 4 நேரம் 40 நிமிஷம்

I பின்வரும் வினாக்களுக்குரிய விடைகள் வினாக்களின் முடிபில் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

உ + ம். கமுகிலும் பலாசிறியது; கமுகிலும் தென்னை பெரியது. மூன்றிலும் பெரியது எது? தென்னை + கமுகு பலா

1. எனக்கு வயது 35, என் மூத்த மகனின் வயது 15; என் மனைவியின் தற்போதைய வயது என்னவாக இருந்தால் அவள் 18-ம் வயதில் மூதத மகனைப் பெற்றிருப்பாள்? 2?, 30, 32, 33, 34.
2. என்னுடைய உயரம் தம்பியின் உயரத்திலும் 2" கூட, தம்பியின் உயரம் அண்ணனின் உயரத்திலும் 5" குறைய அண்ணனின் உயரம்எனது உயரத்திலும் எவ்வளவுகூட? 1," 2," 3," 4,"
3. சீதாவுக்கு, செல்லம் என்ற மூத்த சகோதரியும், புனிதம் என்ற இளைய சகோதரியும், புவனம் என்ற மாமியாரும் அன்னம் என்ற தாயாரும உளர்.



a புனிதத்தின் தாய் யார்? புவனம், அன்னம், சீதா
b செல்லத்தின் மாமி யார்? புனிதம், அன்னம். புவனம்
c அன்னத்தின்மைச்சாள்யார்? புவனம், சீதா, செல்லம்
d அன்னத்தின் பிள்ளைகள் எத்தனை? 4, 2, 3

4. A, B இருவரும் நண்பர்கள். A-க்கு Bயிலும் வயதுகூட. Bயும் Cயும்நண்பர்கள். Cயின் வயது Bயின்வயதிலும்கூட
A இதில் மிகக்கூடிய வயதுயாருக்கு A, B, C தெரியாது
B Aயும் Cயும்ஒரேவயதினரா? ஆம், இல்லை, தெரியாது
5. 4-ல் உள்ள A, B, C, மூவரும் செய்கின்றனர் விவாகம். B யின்மகன் முதல் வருடமும், Aயின் மகன் இரண்டாம் வருடமும், Cயின்மகன் மூன்றும்வருடமும் பிறந்தார்கள் Bயின் இரண்டாம் மகன் முதலாம் பிள்ளை பிறந்த மூன்றும் வருடத்தில் பிறந்தது.
a. Bயின் இரண்டாம் பிள்ளையின் வயது வேறெந்தப் பிள்ளையின் வயதிற்குச் சரி?
b. Aயின் இரண்டாம்பிள்ளை முதற்பிள்ளை பிறந்த ஐந்தாம் வருடத்திற் பிறந்தால் Bயின் முதற்பிள்ளைக்கும் Aயின் இரண்டாம் பிள்ளைக்கும்உள்ள வயதுவேறுபாடுஎன்ன?
c Cயின்பிள்ளை எத்தனை மூத்தபிள்ளைகளை உடையது?

ii பின்வரும் வினாக்களிற் கேட்பதை வலப்பக்கத்திற் செய்க

உ + ம் ஒரு முக்கோணம் வரை △

1. கோட்டின் வலப்புறத்தில் ஒரு வட்டம் இடு
2. 1899ஆம் ஆண்டிலிருந்து அடுத்த ஐந்து இரட்டை ஆண்டுகள் எழுதுக
3. இருபதின் இரட்டி மடங்கை நான்காற் பிரித்து மூன்றைச் சேர்
4. பதினொன்றிற்கு மேலுள்ள ஒன்றை விடுத்த ஒற்றை எண்கள் 3 எழுது
5. ஒரு வட்டத்தினுள் சதுரமும், அதனுள் ஒரு மூலவிட்டமும் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இலங்கையில் சிங்களர் தொகை கூடவானால் 'குறைய' என்றும் குறையவானால் 'கூட' என்றும் எழுது

7. இரு மனிதரின் விரல்களின் இருமடங்கின் $\frac{1}{4}$ எத்தனை?

8. மூன்று காக்கைகளும், நான்கு மாடுகளும்,5 பிள்ளைகளும் எத்தனை கால்கள் வைத்திருக்கின்றனர்?

9. சூரியனோ சந்திரனோ கூடியகாலம் வருடத்திற் பிரகாசிக்கும்? சூரியன் என்றால் 'சந்திரன்' என்றும் மறுபக்கமாகவும் எழுதுக.

10. ஒரு சதுரக் கடதாசியை மூலைக்குமூலை பாகவும், மையத்துக்கு மையமாகவும் வெட்டின் வரும் துண்டுகள் எப்படியானவை? எத்தனை?

III 1. 'இந்துசமுத்திரம்' a. இதன் நடு எழுத்து எது?

b. இதிலுள்ள ஒரு கூட்டுச் சொல்லின் இடையே உள்ள மெய் எழுத்து எது?—

2. கீழுள்ள எந்தச் சொல் 'எப்பொழுதும்' என்பதன் பொருள் உடையது? சிலசமயம், இடையிடையே, ஓயாது, ஒரு போதும்——

3. கீழுள்ள பொருட் கூட்டத்தில் இயையாத பொருளை எழுது. மா, பலா, பூமி, தென்னை, வாழை

4. கீழுள்ள சொற்கூட்டத்தை ஒழுங்குபடுத்தி வசனமாக்கி ஈற்றுச் சொல்லை எழுதுக. "பிள்ளை பாடசாலைக்கு விளையாட்டுமூலம் செல்லும் படிப்பதற்கு" ——

5. பொருந்தாத எண்ணை எழுதுக. 10, 90, 170, 25, 320

6 உள்ளதுள் சிறிய எண்ணை எழுது. 67, 76, 23. 32, 52, 25, 71, 17——

7. கீழுள்ள எந்தச்சொல் 'விளையாட்டு'க்கு பொருந்தாது? ஓடு, கெந்து, படி, பாடு, தாத்து ——

8. நான், அது இது, எட்டு, எழு, கால், பொருந்தாத சொல் எது?——

9. காலுங் கையும் இன்றி வேலை செய்ய முடியும். இது சரியா? பிழையா? தெரியாதா?



10. "தில்லை நடராசனின் திவ்விய நடனத்தை எல்லையிற் கண்டேன்" a. இதன் நடு எழுத்து எது?——b. இதில் எத்தனை உயிர் எழுத்துக்கள் உள?—— c. இதில் மெய் எழுத்துக்கள் எத்தனை?——

IV பின்வரும் எண் கூட்டங்களின் அடுத்த இருஎண்களை எழுதுக.

1. 1, 4, 9, 16, 25 —,—.  2. 29, 22, 16, 11, 7—, —
3. 14, 16,17,20,21,25,26,—,  4. 50, 37, 26,17 —,—
5. 99, 87, 75, 63 —,—,  6. 3, 2, 4, 3, 5, 4, 6 -,—.
7. 1, $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, —, —,  8. 256, 128,—, 32,—,8, 4.
9. 16. 16,17, –,19 – 21,21,10. 8, 9, 0, 7, 8, 0, 6, —,—.

V பின்னுள்ள வினாக்களுக்குரிய விடைகளுட் சிறந்ததன் கீழ் கீறுக.

a தாய்மார் குழந்தைகளுக்கு பால் ஊட்டுவதேன்?
1. அதனை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கலாம்
2. குழந்தைகளுக்குச் சிறந்த உணவு
3. அதில் நெய் கூடுதலாக உண்டு.

b நாம் தேகாப்பியாசஞ் செய்வது ஏன்?
1. எங்கள் சத்தினைச் செலவாக்குவதற்கு
2. படிப்பிலிருந்து ஆறுதல் பெறுவதர்கு
3. உடம்பைத் திருத்துவதற்கு.


c போர்வீரர் குறித்த ஒரு உடை அணிவது ஏன்?
1. பகைவரை வெருட்டுவதற்கு
2. சுகமாக அறிவதற்கு
3. படைக்குரிய துணிகளைப் பாவிப்பதற்கு

d சப்பாத்துத் தோலினாற் செய்வதேன்?
1. தோல் அதிகம் இருப்பதால்
2. அது நன்றாக மினுக்கலாமாதலால்
3. அது நன்றாக அணியலா மாதலால்

e அறையினை வெளிச்சமுள்ளதாகச் செய்வதேன்?
1. யன்னலை இடையிடையே திறவாவிட்டால் பின்பு திறக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. யன்னலைத் திறந்து விட்டுப்பார்க்க ஆனந்தமாகஇருக்கும்
3. உஷ்ணபவனம் உடலுக்குக் கூடாது
4. அறையின் காற்று இடையிடையே மாற்றப்படவேண்டும்




மேலுள்ள படம், "கணபதிக்கும் மனைவிக்கும் சிவவாசம் சிவக்கொழுந்து, சிவநேசம் என்று மூன்று பிள்ளைகள் என்றும், சிவவாசம் சிவகுமாரினை விவாகஞ் செய்து, சிவசோதி என்ற பிள்ளையையும், சிவநேசம் சிவபாக்கியத்தை விவாகஞ் செய்து சிவயோகம், சிவபாலன் என்ற பிள்ளைகளையும் பெற்றனர்," என்றும் விளக்குகின்றது.

இதுபோல கீழுள்ள படத்தை விளக்குக




விளக்கம் ..............

..............

..............

VII மேலுள்ள விளக்கத்திலிருந்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சின்னம்மாவுக்கு எத்தனை மாமன்கள் ? —
2. சிவசம்புவின் பெற்றோரின் பெற்றோர் யாவர் ? —
3. முத்துவின் சகோதரர்கள் எத்தனை பேர் ? —
4. சீதாவின் மைத்துனிகள் எத்தனை பேர் ? —
5. இந்தக் குடும்பத்தில் விவாகஞ் செய்யாதவர் எத்தனை பேர்? —



VIII கீழுள்ள சொற்களை ஏற்ற ஒழுங்கில் வரிசைப்படுத்தி நடுச் சொல்லிற்குக் கீறிடுக.

உ + ம்: வீடு தெரு அறை பட்டினம் நாடு

1. மரம் வேர் கொப்பு சுள்ளி பழம், பூ காய்
2. புத்தகம் பந்தி பாடம் வசனம் சொல்
3. விமானம் கார் வண்டி துவிச்சக்கரம் புகைவண்டி
4. மாடு ஆடு எலி பூனை நாய்
5. பெட்டி கடகம் அலமாரி புத்தகம் கொப்பி
6. யார் அடி அங்குலம் தொன் அந்தர்
7. மனிதன் பிள்ளை குழந்தை மாணவன் காளை
8. 60 36 12 84 108
9. அ இ எ ஒ உ
10. 5 $7\frac{1}{2}$ 10 $2\frac{1}{2}$ 0

IX கீழ் உள்ள வசனத்தின் இடையில் உள்ள மூன்று சொற்களின் பொருத்தமான சொல்லின்கீழ் கீறுக.

1. வீட்டுக்கு எப்போதும் (கூரை, சுவர், வேலி) உண்டு
2. எழுதுவதற்கு எப்போதும் (மை, ஒட்டுத்தாள், கடதாசி) வேண்டும்.
3. கிணற்றுக்கு எப்போதும் (துலா, வாளி, தொட்டி) வேண்டும்.
4. எண்சாண் உடம்பிற்கு (தலை, கை, கால் பிரதானம்)
5. கணிதத்தில் தேறுவதற்கு (வாய்பாடு, எண்) கணக்கு தெரியவேண்டும்
6. கோடைகாலத்தில் (மழை வெயில் காற்று) இல்லாமையாலே
7. (பயிர்கள் பிராணிகள் சகல ஜீவன்களும்) வாடி ஒதுங்குதற்கு
8. (வீடு இடம் நிழல்) தேடிக்கொண்டிருப்பன
9. நாங்கள் (அனேகமாக எப்போதும் சிலகாலங்களில்) கண்டு
10. கடவுளை (வேண்டி பிரார்த்தித்து இரங்கி) மழை தரும்படி வேண்டுவதுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

X கீழ் உள்ள விஷயங்கள் சரியாயின் 'பிழை' என்றும் பிழையா யின் 'சரி' என்றும் எழுதுக.

உ+ம் சமுத்திரத்தில் எப்போதும் நீர் உண்டு பிழை
மாரி காலத்தில் மழை தினமும் பெய்யும் சரி

1. ஒரு போர்வீரன் ஒரு கையில் வாளும் மறுகையில் ஈட்டியும்வைத்துக் கொண்டுதாயாருக்குக் கடிதம் எழுதினனும்
2. நான் தை மாசத்தில் இரவாவிடில் பின்பு ஒருபோதும் இறப்பதில்லை என்பது நான் அனுபவத்திற் கண்ட உண்மை ——
3. குழந்தைகள் தினமும் பால் குடிக்க வேண்டும் ——
4. 1915-ம் ஆண்டிலே இருந்த ஆண்களிலும் கூடுதலான பெண்கள் விவாகமானர்கள் ——
5. வீட்டினுள் எப்போதும் ஆட்கள் இருக்க வேண்டும் —
6. ஒரு மனிதன் கோழி களவாண்டான் என்று நீதிபதி முன் ஐவர் சத்தியஞ் செய்தனர். கள்வன் உடனே "துரையே நான் களவாடவில்லை என்று 50 ஆட்களைக் கொண்டு சத்தியஞ் செய்விக்கின்றேன்" என்றான் ——
7. கண் இல்லாதவன் பார்க்க மாட்டான் ——
8. கந்தையன் தன் வாழ்வு இழந்த மனைவியின் சகோதரியை மணந்தான் —
9. ஒவ்வொரு சட்டத்திற்கும் (இதற்குங்கூட) புறநடை உண்டு.
10. பசியுள்ளபோது சாப்பிட வேண்டும்.

பயிற்சி: 5. நேரம் 40 நிமிஷம்.

I. பின்வரும் எண் வரிசைகளின் ஈற்றில் வரவேண்டிய இரு எண்களையும் அடைப்புக் குறியினுள் எழுதுக.

உதாரணம்:—11, 16, 21, 26, (31, 36)

1. 2, 6, 4, 6, 8, 6 (      )
2. 6, 10, 12, 16, 18 (      )
3. 7, 10, 15, 22, 31 (      )
4. 4, 8, 16, 32 (      )
5. 16, 15, 14, 13, 14 (      )
6. $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 (      )
7. 2, 4, 16 (      )
8. ·125, ·025, ·005 (      )
9. 3, 27, 4, 64 (      )
10. 90, 85, 80, 65, 50, 45 (      )

II. பின்வரும் வினுக்களுக்குள்ள விடைகளில் ஏற்றதென நீர் கருதும் விடைக்கு நேரே "×" அடையாளமிடுக.

உதாரணம்:—கடல்நீர் உப்புத்தன்மையாயிருப்பதேன்?

1. உப்புப் பாறை கீழே யிருப்பதனுல்.
2. கடலினுள் உப்பு மீன் நீந்துவதனுல்.
3. அநேக வருடங்களுக்கு முன் மனிதர் உப்பினைக் கடலில் போட்டதால்.

× 4. ஆறுகள் சிறிது உப்பை தொடர்ந்து கொண்டு சேர்ப்பதால்.

I. கோடையிலும் பார்க்க மாரியில் பகற்பொழுது குறைந்திருப்பதேன்?

1. குளிர் கூடுவதனுல்.
2. சூரியனை முகில்கள் மறைப்பதனுல்.
3. அந்தத் தரைப் பகுதி கூடுதலாகச் சரிந்திருப்பதினுல்.
4. பகற்காலத்தில் மங்குளுவமாகவும் பனித்தன்மையாகவும் இருத்தலினுல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. கம்பளங்கள் ஏன் உபயோகமானவை?

1. எங்கள் பாதங்களைத் துடைக்கலாமாகையினால்.
2. தூசியைச் சேர்த்து மறைத்து வைத்திருப்பதனால்.
3. எங்கள் அந்தஸ்தைக் காட்டுவதனால்.
4. அவை மென்மையாகவும் சூடாகவும் இருத்தலினால்.

III. நாம் சினிமா பார்ப்பதேன்?

1. பிற நாடுகளைப்பற்றிப் படிப்பதற்கு.
2. சந்தோஷம் அடைவதற்கு.
3. சினேகிதரைச் சந்திப்பதற்கு.
4. நன்றாகப் புகைப்பதற்கு.

IV. தடிமல் உள்ள மனிதன் தும்முவதேன்?

1. தனக்காகப் பிறர் துக்கப்படுவதற்கு.
2. தடிமலை நீக்குவதற்கு.
3. கைக்குட்டையை உபயோகிப்பதற்கு.
4. அதைத் தடை செய்ய முடியாமையினால்.

V. குழந்தைகளை அரைச் செலவிற் பிரயாணம் செய்ய விடுவதேன்?

1. அவர்கள் பெட்டிகளைப் பழுதாக்காமையினால்.
2. குறைந்த இடத்தை எடுப்பதனால்.
3. நேசிக்கத்தக்க சிறியவர்களாக இருப்பதனால்.
4. உழைப்பு இல்லாதவர்களாகையால்.

III. கீழேயுள்ள முதல் மூன்று சொற்களுக்கும் பொருத்தமான ஒரு சொல் அடைப்புக் குறியினுள் இருக்கும் சொற்களுள் ஒன்று அச் சொல்லுக்கு | வட்டம் | இடுக.

உதாரணம்:—

பெண்சில், பேனா, கடுதாசி—மேசை, கதிரை, | மைக்கூண்டு. |

1. வலை, தூண், சலாகை—[கிணறு, கழுகு, கிடுகு]
2. புத்தகம், பாடம், பக்கம்—[கொப்பி, கோடு, பந்தி]
3. காற்று, முகில், மலை—[சூரியன், மழை, சந்திரன்]
4. ஆடு, கோழி, மான்—[யானை, அணில், பூனை]
5. சந்திரன், சூரியன், நட்சத்திரம்—[சனி, வெள்ளி, ஞாயிறு]
6. அடுப்பு, நெருப்பு, நீர்—[பெட்டி, சட்டி, அகப்பை]
7. புத்தன், கிறிஸ்தவன், சைவன்—[இஸ்லாமியன், இந்தியன், கிறிச்சுரன்]



8. வடகிழக்கு, தென்கிழக்கு, தெற்கு—[வடக்கு, வடமேற்கு, மேற்கு]
9. பருப்பு, குழம்பு, சொதி—[சோறு, பழம், மோர்]
10. [illegible]—[அலுமாரி, வைக்கோல், கொட்டில்]

IV. பின்வரும் சொற்களின் எதிர்ச் சொற்களை அடைப்பினுள் தெரிந்தெடுத்து அதன்மேல் இலக்கம் இடுக.

உதாரணம்:—

I கறுப்பு II இருட்டு — (சிவப்பு, நீலம், வெண்மை, ஒளி) [I, II]

1. ஒற்றுமை.
2. பகை.
3. யுத்தம்.
4. நீளம்.
5. கோபம்.
6. நித்திரை.
7. இரவு.
8. வெற்றி.
9. இகழ்ச்சி.
10. அழுகை.

[யோசனை, சிரிப்பு, சபதம், புகழ்ச்சி,
வேற்றுமை, விழிப்பு, ஒற்றுமை,
களிப்பு, சமாதானம், கட்டை, தோல்வி,
பகல், சந்தோஷம்.]

V. பின்வரும் வெற்றிடங்களை ஒப்புமை நோக்கி நிரப்புக:—

உதாரணம்:—

சந்தோஷம், சிரிப்பு, துக்கம், அழுகை—[பேசாமை, அழுகை, கோபம்]

1. குளிர், பனிக்கட்டி, சூடு—[மின்னல், உஷ்ணம், நெருப்பு]
2. புகையிலை, விரித்தல், பெண்மணி—[நகைத்தல், சமைத்தல், சிரித்தல்]
3. வரைதல், பெண்சில், பூச்சு— (மை, பிறஷ், வர்ணம்)
4. தந்தை, மகன், தாய்— (மருமகன், புருஷன், மகன்
5. நெருப்பு, நீர், பனி— (குளிர், சந்திரன், உஷ்ணம்)
6. யானை, சிங்கம், பூனை— (நாய், எலி, ஆடு)
7. வாய், வயிறு, எண்ணெய்— (பொரியல், விளக்கு, மோதகம்)
8. வெளிச்சம், ஒளி, மலர்— (நிறம், அழகு, வாசனை)
9. பால், நெய், எள்ளு— (கொள்ளு, எண்ணெய், பிண்ணாக்கு)
10. பூமி, பொருள், சுவர்க்கம்—(இன்பம், அருள், இருள், நேரே)

VI. கீழேயுள்ள முதல் ஐந்து பழமொழிகளுக்கு நேரே பொருத்தமான மறு வாக்கியங்களின் இலக்கங்களை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
2. தாழும் மனிதன் துரும்பையும் பிடிப்பான்.
3. அவதியில் விவாகம் செய்து ஆறுதலில் அவலப்படுகிறோம்.
4. தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி.
5. தன் வினை தன்னைச் சுடும்.
6. கண்டதும் காதல் கொண்ட பின் சாதல்.
7. எறிகிறவன் முகத்திலே சாம்பர் படியும்.
8. எட்டத்தில் விறகு நல்ல விறகு.
9. முழு நம்பிக்கை இழந்தவன் எதனையும் நம்புவான்.
10. வாய்க்கும் தருணத்தில் செய்வதைச் செய்.

VII. பின்வரும் வாக்கியங்கள் ஒழுங்கற்ற ஒரு வசனத்தின் பகுதிகளாகும் அவற்றை ஒழுங்குபடுத்தி அவை தரும் பொருள் சரியாயின் 'ஆம்' என்றும் பிழையாயின் 'அல்ல' என்றும் எழுதுக.

உதாரணம்:—தெரியும் பகலில் சில சமயம் சந்திரன். —ஆம்.

1. எப்போதும் பெய்வதுண்டு மாரிகாலத்தில் மழை.
2. பிழை ஆட்கள் அறிந்தபின்பும் விடுவதுண்டு.
3. ஞானம் சென்றவர் பொதுவாகப் பேசுவர் சிறை.
4. துவக்கு சாப்பிடுவதற்கு கூடாது மருந்து.
5. இளம் உபாத்தியாயன் பிள்ளைகளில் முதிய அறிவு கூடியவர்.

VIII. பின்வரும் கதையினுள் இல்லாத சொற்களைப் பக்கத்தேயுள்ள சொற்களுள் தெரிந்தெடுத்து நிரப்புக.

முன்னொரு——ஒரு : : காலம், இடம், மனிதன்.
——இருந்தது. ஒருநாள் : : மனிதன், சிங்கம், நாய்.
——காட்டிலே உலாவியது. : நாய், சிங்கம், அது.
அந்த——பிற பகைவர்களை : : ரோட்டில், காட்டில், நாட்டில்,
——அவைகளுக்கு தெரியாது : கேட்டு, கண்டு, சந்தித்து,
ஓடியது. அதனை முள்ளொன்று வாலில், காலில், பாதத்தில்
தைத்தது.

IX. பின்வரும் சொற்களுக்கு ஒழுங்கான முறையில் இலக்கமிடுக.

1 3 2 4

உதாரணம்—முட்டை, கோழி குஞ்சு, இறைச்சி.

1. பழம், பூ, விதை, செடி.
2. உடன்படிக்கை, சண்டை, படைதிரட்டல், வெற்றி, யுத்த ஆரம்பம், சமாதானம்.
3. வீடு, சுவர், கதவு, தூண், கூரை, தளம்.



4. தாய், குழந்தை, மனுஷன், தகப்பன், பையன், வாலிபன்.
5. இடுப்பு, தலை, கால், தோள், நெஞ்சு, பாதம்.

X. கீழ் உள்ள எண் கூட்டங்களைக் கீழும் பக்கமுமாகக் கூட்டி மொத்தங்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. 3 | 1 | 2 | 4 | 6 | —— |
| 5 | 6 | 3 | 8 | 7 | —— |
| 1 | 8 | 7 | 6 | 5 | —— |
| 2 | 7 | 5 | 9 | 1 | —— |
| 4 | 9 | 7 | 9 | 2 | —— |
| 6 | 3 | 6 | 5 | 4 | —— |
| | | | | —— | |
| —— | —— | —— | —— | —— | |
| —— | —— | —— | —— | —— | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. 11 | 19 | 17 | 15 | 13 | 21 | —— |
| 13 | 22 | 32 | 26 | 24 | 28 | —— |
| 15 | 24 | 99 | 66 | 77 | 88 | —— |
| 17 | 26 | 88 | 100 | 109 | 105 | —— |
| 19 | 28 | 77 | 105 | 23 | 03 | —— |
| 21 | 32 | 66 | 109 | 03 | 552 | —— |
| —— | —— | —— | —— | —— | —— | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. 1562 | 5216 | 1652 | 2156 | 1265—— |
| 1642 | 1528 | 2517 | 4862 | 1256—— |
| 1265 | 1256 | 5679 | 7956 | 9870—— |
| 2156 | 2517 | 7956 | 432 | 12—— |
| 5216 | 4862 | 9870 | 12 | 02—— |
| —— | —— | —— | —— | —— |
| —— | —— | —— | —— | —— —— |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயிற்சி: 6** **நேரம்: 40 நிமிஷம்**

I பின்வரும் சொற்களை அகராதி வரிசையில் இலக்கமிடுக.

1. ஆல் ( ) ஆவணி ( ) அமாவாசை ( ) அட்டமி ( ) அர்த்தம்.
2. கருணை ( ) காவலன்கோ ( ) கனவு ( ) கதை ( )
3. வெள்ளம் ( ) வெளவால் ( ) வெறுமை ( ) வேல் ( ) வேறு ( )
4. உடை ( ) உறை ( ) உமை ( ) உதை ( ) உலை ( )
5. அத்தி ( ) சித்தி ( ) புத்தி ( ) யுக்தி ( ) சக்தி ( )

II பின்வரும் வினாக்களின் விடைகளை வினாக்களின் முடிபுகளில் உள்ள விடைகளில் தெரிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. நான் மூன்று நிமிடங்கள் முன்பு சென்றிருந்தால் நாலு நிமிடங்கள் பிந்திப் புறப்பட்ட 8 மணி 52 நிமிஷ வண்டியில் சென்றிருப்பேன். நான் வண்டியின் நிலையத்திற்குச் சென்ற நேரமென்ன? 8-49. 8-55, 8-53.
2. ஒரு இரவு ஒருவரை நேரங் கேட்டபோது "10ற்கு 5 நிமிஷம் இருக்கிறது" என்றார். அவர் பார்த்தபோது பெரிய கம்பியைச் சிறிய கம்பியாகப் பார்த்திருந்தால் நேரம் என்னவாக இருந்திருக்கும்? 11-50, 10-10, 9-55
3. எனக்கும் என் தங்கைக்கும் உள்ள தொடர்பு என் மனைவிக்கும் வேறு யாருக்கும் உண்டு? தங்கை, தம்பி, அண்ணன், அக்கா.
4. ஒரு தொகையான அப்பத்தை ஒரு தொகையான பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்தபோது ஒரு அப்பம் மிகுதி இருந்தது. ஆளுக்கு இரண்டாகக் கொடுத்தபோது ஒரு ஆள் மிகுதியாக இருந்தது.
   i அப்பம் எத்தனை? 2, 3, 4, 5.
   ii பிள்ளைகள் எத்தனை? 2, 3, 4, 5.



5. 4 மணி 52 நிமிஷத்திற்கும் 5 மணி 26 நிமிஷத்திற்கும் உள்ள வித்தியாசத்தை ஒருமணிக்கு 10 நிமிஷம் குறைந்த நேரத்துடன் கூட்டி நாலால் பிரித்து அதில் எவ்வளவு குறைத்தால் கால் மணித்தியாலம் ஆகும்? 4, 6, 8, 10

III பின்வரும் கேள்விகளின் சரியான விடைகளை வலப்பக்கத்தில் எழுதுக.

1. செல்லம்மா செல்லாச்சியில் உயர்ந்தவள். செல்லம்மா செல்லத்தில் குறுகியவள். மூவரில் உயர்ந்தவர் யார்?
2. கந்தன் வேலனிலும் விரைவாக ஓடுவான். கோபாலன் வேலனிலும் விரைவாக நடப்பான். இராமன் வேலனிலும விரைவாக உண்பான். முத்தொழில்களிலும் மந்தமானவன் யார்?
3. காந்திமதி கனகம்மாவிலும் வெளுத்தவள். கனகம்மா கண்மணியிலும் வெளுத்தவள். மூவருள்ளும் கனகம்மா கரியவளா?
4. மோட்டார் வண்டியில் நான் போகும் பொழுது எனக்கு வலது பக்கத்தில் சூரியன் அஸ்தமிப்பதைக் கண்டேன். வண்டி எத்திசை நோக்கிச் சென்றது?
5. செல்லம் என்னிலும் பார்க்க 2 ஆண்டு 2 நாட்கள் இளையவள். நான் என் சகோதரியிலும் பார்க்க 2 ஆண்டு 2 நாட்கள் இளையவள். என் சகோதரி 1920-ம் ஆண்டு தை மாதம் 12-ந் திகதி பிறந்திருந்தால் செல்லம் பிறந்த தேதி என்ன?

IV. கீழ் உள்ள எண் கூட்டங்களுள் இல்லாத எண்களை எழுதுக.

1. 2, 6, 18, —, —
2. 3, 6, 9, —, —
3. 4, 6, 8, —, —
4. 5, 6, 7, —, —
5. 1, 6, 11, — 12 —
6. 144, 48, 16, 8, 1, —, —
7. 396, 132, 22, —
8. 696, 348, — 87, 29, —
9. 105, 210, — —
10. $\frac{1}{16}$, $\frac{1}{32}$, $\frac{1}{64}$, — —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V கீழ் உள்ள கதையில் உள்ள வெளிகளிலுள்ள சொற்களுட் பொருத்தமான சொல்லினை நீக்கி விடுக.

ஒரு (நாட்டிலே, காட்டிலே, வீட்டிலே) ஒரு பூனை இருந்தது. அது தினமும் (வீட்டுக்கு காட்டுக்கு நாட்டுக்கு) சென்று பால் (திருடுவது, வேண்டுவது, பெறுவது) வழக்கம். ஒருநாள் அது நாட்டுக்கு வரும்பொழுது ஒரு (நாய், குதிரை, குரங்கு) அதனைக் கண்டு துரத்தியது. பூனை விரைவாக ஓடி (வெண்ணெய், பால், நெய்) திருடும் வீட்டினுள் புகுந்தது. நாயும் அந்தவீட்டு எஜமானனுடையது. அது பூனையின் வரவை (எஜமானன், எஜமாட்டி, வேலைக்காரன்) தெரியச் செய்தது. எஜமானன் (மகள், மகன், வேலைக்காரன்) அழைத்து (பூனை, நாய், பிள்ளைகள்) பார்க்க விட்டான். வேலைக்காரன் வீட்டைத் திறந்து வீட்டுக்குள் புகுந்ததும் பூனை அவனைத் தாக்கிக் கொண்டு வெளியே பாய்ந்தது. நாய் அதன்மேல் பாய்ந்தது. (எஜமானன், வேலைக்காரன், எஜமாட்டி) நாயின்மேல் பாய்ந்து அதனைப் பிடித்து பூனையை விடுவித்தான்.

VI பின்வரும் வசனங்களுக்கு இடையேயுள்ள சொற்களுள் பொருத்தமற்ற சொற்களை நாற்கோட்டினுள் அடைக்குக.

உ+ம்: இலையின் நிறம் [பச்சை, | சிவப்பு | | நீலம் |]

1. ஒரு மனிதன் எப்போதும் [சாப்பிடுவான், விளையாடுவான், சுவாசிப்பான்.]
2. தாய் மகளிலும் [புத்தியில் உயரத்தில் வயதில்] கூடியவள்.
3. பந்தயத்தில் எப்போதும் [மத்தியஸ்தர் பார்ப்போர் போட்டியிடுவோர் இருப்பர்.]
4. ஒரு குளத்தில் எப்போதும் [நீர், தவளை, கரை] உண்டு.
5. ஓடும் மோட்டார் வண்டியில் [பிரயாணிகள், சாமான்கள், சாரதி] உண்டு.
6. தகப்பன் [அன்புள்ளவன், கிழவன், ஆண்பிள்ளை, ஏழை]
7. மரத்திற்கு [வேர், கிளை, இலை] எப்போதும் உண்டு.
8. பாடசாலையில் [பிள்ளைகள், ஆசனங்கள், ஆசிரியர்] எப்போதும் இருக்க வேண்டும்.



9. வானத்தில் [முகில் நீலநிறம் சாம்பர்நிறம்] எப்போதும் காணலாம்.
10. சமுத்திரத்தில் ஒழுங்கற்ற [நீர் கரை மீன்] எப்போதும் உண்டு.

VII பின்வரும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றிலும் பொருந்தாத சொல்லைக் கீறிவிடுக.

1. குவளை, கமலம், பாரிஜாதம், றோசா, மல்லிகை காந்தள்.
2. விவேகானந்தர், மகாத்மா, நேருஜீ, சேர்ச்சில், பாரதி, படேல்.
3. இரத்தினம், தங்கம், முத்து, வெள்ளி, தகரம்.
4. புல்வாய், பசு, மந்தி, பிடி.
5. மானம், குலம், வண்மை, தானம், தவம், சுவர்க்கம்.
6. ஆல், அரசு, வேம்பு, பனை, புளி, மா.
7. விஞ்ஞான நூல், தருக்கநூல், கணிதநூல், ஆத்மநூல், இலக்கியநூல்.
8. ஆசிரியன், வித்தியாதரிசி, மாணவன், பரீட்சைத்தலைவன்
9. சந்தோஷம், துக்கம், கோபம், சோகம், அழகு.
10. அழுகை, ஓலம், ஆர்ப்பரித்தல், முணுமுணுத்தல.

VIII கீழ்வரும் வினாக்களுக்கு உள்ள விடைகளுள் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. ஒரு திசையை நோக்கிச் செல்லும் வண்டிகள் ஓரே ஓரமாகச் செல்வதேன்? 1. மோதுதலைத் தடுப்பதற்கு. 2. நடந்து செல்பவர்கள் மறு ஓரத்தாற் செலவதற்கு. 3. வீதியில கொஞ்ச இடம் காலியாக இருப்பதற்கு.
2. பலமுறை யோசித்து ஒருமுறை பேசுவதேன்?
   1. விரைவாகப் பேசுவதற்கு. 2. அநேக விடயங்களைச் சொல்லுவதற்கு. 3. பிழையின்றிச் சொல்லுவதற்கு.
3. மோட்டோரில் சாரதியின் வலது பக்கத்தில் சிறு கண்ணாடி யிருப்பதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிரயாணம் செய்வோர் தம்மைப் பார்ப்பதற்கு. 2. பின்னால் வருவனவற்றைப் பார்ப்பதற்கு. 3. சாரதி தன்னைப் பார்ப்பதற்கு.

4. மது அருந்தாதே என்று பறை சாற்றுவதேன்?

1. பணத்தை வீணாக்காமல் இருப்பதற்கு. 2. தேகத்திற்குக் கெடுதியுண்டாக்காமல் இருப்பதற்கு 3. தீமைகளைச் செய்யாமல் தடுப்பதற்கு.

5. நாம் கடிகாரத்தை ஏன் உபயோகிக்கிறோம்?

1. கிரமமாக வேலை செய்வதற்கு 2. சரியான நேரத்தை அறிவதற்கு 3. மற்றவர்கள் நம்மைப் புகழ்வதற்கு

IX கீழேயுள்ள சொற்கூட்டங்களை நிரைப்படுத்தி ஒரு வசனமாக்கி அந்த வசனத்தில் வரும் முதலாம், மூன்றாம், ஐந்தாம் சொற்களின்மேல் அதே எண்களைக் குறிக்குக.

உதாரணம்: 3 5 1

பொன் இட்டு பார் சுவருக்கு மண் பார் பெண்ணுக்குஇட்டு

1. போல, பூனை, சூடிக்கொண்டால், பார்த்துப், புலியை.
2. மந்திரி. புத்தி, இராசாவுக்கு, கெட்ட, மதிகெட்ட.
3. இழப்பான் இச்சிப்பான் பிறர் தன் பொருளை பொருளை
4. இரவில் பேசு, அதுதானும், பேசாதே, பகலில் பக்கம் பார்த்து.
5. நாறல், தண்ணீர், கழுவுவானேன்,சாணியை, விட்டு மிதிப்பானேன்.
6. நீருக்கு புல்லிதழ், பூவிற்கு, உமி உண்டு நுரை உண்டு உண்டு நெல்லுக்கு.
7. பூனையை காவல் வைப்பது நண்டைபோல பாலுக்கு கட்டு காவல் நரியை வைக்காதே.
8. விந்தை என்ன சமத்துவத்தில் தலைமை பணக்கார வகிப்பது பிள்ளைகள்.
9. கெடும் பிதது பிடித்தால் சக்தி இருந்தால் அமைதியாக வைத்திரு. அருள்.
10. வாழ்க்கை நடத்தாதே உணவை உணவுக்காக வாழ்க்கைக்காக உண.

21634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1)

| | | | |
|---|---|---|---|
| 25 | 41 | 32 | — |
| 32 | 97 | 56 | — |
| 41 | 56 | 65 | — |

(2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 93 | 95 | 97 | 68 | 54 | — |
| 97 | 54 | 68 | 93 | 75 | — |
| 54 | 75 | 07 | 70 | 17 | — |
| 68 | 93 | 70 | 100 | 85 | — |
| 95 | 68 | 17 | 85 | 06 | — |

(3)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 156 | 165 | 651 | 561 | 1918 | 2003 | — |
| 1918 | 103 | 1000 | 03 | 250 | 001 | — |
| 561 | 001 | 657 | 675 | 576 | 765 | — |
| 651 | 250 | 675 | 286 | 16 | 1603 | — |
| 165 | 03 | 576 | 16 | 1001 | 2063 | — |
| 2003 | 1000 | 765 | 1603 | 2063 | 13602 | — |

(4)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.005 | 50.01 | ·002 | 25·003 | 200. | — |
| 25·003 | 2·006 | 1·1 | ·005 | 63· | — |
| 50·01 | 1·1 | ·04 | 25·01 | ·0007 | — |
| ·002 | ·005 | ·0007 | 65·2 | 77.1 | — |
| 200· | 63· | 25·01 | 77·1 | 8·5 | — |

(5)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12560 | 10265 | 12065 | 12605 | 116763 | — |
| 116763 | 562 | 2056 | 5062 | 376 | — |
| 12605 | 376 | 560 | 260 | 6673 | — |
| 12065 | 5062 | 6673 | 60 | 376 | — |
| 10265 | 2056 | 260 | 376 | 206 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29
T113

# பாடசாலைகளுக்கு வேண்டிய புஸ்தகங்கள்.

வித்தியா பகுதியாரின் அங்கீகாரம் பெற்றவை.

| | |
|---|---|
| **புதிய இலகுபோத பாலபாடங்கள்.** | **சதம்** |
| பிள்ளைப்பாடம் .... .... | 40 |
| முதற் பாலபாடம் .... .... | 40 |
| இரண்டாம் பாலபாடம் .... .... | 50 |
| மூன்ரும் பாலபாடம் .... .... | 60 |
| நான்காம் பாலபாடம் .... .... | 70 |
| ஐந்தாம் பாலபாடம் .... .... | 75 |
| ஆரும் பாலபாடம் .... .... | 75 |
| **தொடர்புறு வாசகங்கள்.** | |
| முதற் புததகம் .... .... | 40 |
| இரண்டாம் புத்தகம் .... .... | 50 |
| மூன்ரும் புத்தகம .... .... | 60 |
| நான்காம் புத்தகம் .... .... | 7[illegible] |
| ஐந்தாம் புத்தகம் .... .... | 75 |
| ஆரும் புத்தகம் .... .... | 75 |
| **சரித்திரபாடவாசகம்.** | |
| இரண்டாம் வகுப்பு .... .... | 60 |
| மூன்ரும் வகுப்பு .... .... | 1-00 |
| நான்காம் வகுப்பு .... .... | அச்சில் |
| ஐந்தாம் வகுப்பு .... .... | |
| (உலகமும் இலங்கையும் 1-ம் பாகம்) விரிவானது | 1-50 |
| ஆரும் வகுப்பு .... .... | |
| (உலகமும் இலங்கையும் 2 ம் பாகம்) —,,— | 1-0[illegible] |

க. வைத்தியலிங்கம், அதிபர், நாவலர் அச்சுக்கூடம்,
யாழ்ப்பாணம்.

57/50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org